தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1969 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 91 முதல் 98 வரையில் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனைக் கட்டடம்.

*99 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள்:** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரில் உள்ள அரசாங்க மருத்துவ மனையை விஸ்தரிக்கும் அல்லது புதிதாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) செயற் குறிப்பிற்கு அரசினர் ஒப்புதல் ஆணை பெற்றபின், நிதி நிலைமையைப்பொறுத்து இவ்வேலை துவங்கப்படும்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, உடுமலைப் பேட்டை மருத்துவ மனை புதிதாகக் கட்டப்படுமா அல்லது இருப்பதையே பழுதுபார்க்கப்படுமா? இந்த ஆண்டே அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அங்கே ஏற்கெனவே மருத்துவ மனை இருக்கிறது. மேலும் அதை விஸ்தரிக்கச் செய்வதற்குத்தான் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. நிதிநிலைமையைப் பார்த்து அதற்கேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஹொகனக்கலை சுற்றுலா மையமாக்கல்.

*100 வினா.—**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி ஜில்லாவில் ஹொகனக்கலை யாத்திரிகை ஸ்தலமாக (Tourist Centre) அமைக்க, அரசாங்கம் ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை